செ.வெ.எண் :32/2021 நாள்: 20.01.2021

**பத்திரிக்கை செய்தி**

**இறுதி வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்கள்.**

---

விருதுநகர் மாவட்டத்தில் வாக்காளர் சுருக்கத் திருத்தப் பணிகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து, இம்மாவட்டத்திலுள்ள ஏழு சட்டமன்ற தொகுதிகளுக்கான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியல், இன்று (20.01.2021) விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் வெளியிடப்பட்டது. இந்த இறுதி வாக்காளர் பட்டியல் நிமித்தம் 17.11.2020 முதல் 15.12.2020 வரையிலான சிறப்பு சுருக்கத் திருத்த காலத்தில் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் பாகம் மாறுதல் ஆகியவற்றிக்காக பொது மக்களிடமிருந்து நேரிலும், சிறப்பு முகாம்கள் வாயிலாகவும், இணையதளம் வாயிலாகவும் மனுக்கள் பெறப்பட்டு, பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு, தகுதியுள்ள மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இக்காலத்தில் விருதுநகர் மாவட்டத்திலுள்ள 7 சட்டமன்ற தொகுதிகளையும் சேர்த்து தகுதியுள்ள 54,793 நபர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இறந்த மற்றும் இரட்டை பதிவுடைய 13,170 வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். விருதுநகர் மாவட்டத்திலுள்ள ஏழு சட்டமன்ற தொகுதிகளிலும், ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர்களே அதிகம் உள்ளனர். சிவகாசி சட்டமன்ற தொகுதியில் அதிக பட்சமாக 2,60,941 வாக்காளர்கள் உள்ளனர். தற்போதுள்ள மொத்த வாக்காளர்களின் விபரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | சட்டமன்ற தொகுதி | ஆண் | பெண் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. ம | 202-இராஜபாளையம் | 116258 | 122414 | 29 | **238701** |
| 2. | 203-ஸ்ரீவில்லிபுத்தூர் | 121517 | 128031 | 32 | **249580** |
| 3. | 204-சாத்தூர் | 121939 | 129534 | 29 | **251502** |
| 4. | 205-சிவகாசி | 127127 | 133787 | 27 | **260941** |
| 5. | 206-விருதுநகர் | 109607 | 114674 | 46 | **224327** |
| 6. | 207-அருப்புக்கோட்டை | 108063 | 114899 | 18 | **222980** |
| 7. | 208-திருச்சுழி | 108172 | 112536 | 12 | **220720** |
| **மொத்தம்** | | **812683** | **855875** | **193** | **1668751** |

வாக்காளர் பட்டியலில் பெயர் புதிதாக தமது பெயரை இணைத்துக் கொள்ள விரும்பும் தகுதியுள்ள இளம் தலைமுறையினர் , விடுபட்டோர், நீக்கம் மற்றும் திருத்தம் செய்ய விரும்பும் நபர்கள் 21.01.2021 முதல் இணையதளம் வாயிலாகவோ அல்லது சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள தேர்தல் பிரிவில் நேரிலோ விண்ணப்பிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.மங்களராமசுப்ரமணியன், சார் ஆட்சியர் திரு.ச.தினேஷ்குமார்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.காளிமுத்து, வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.முருகேசன்(அருப்புக்கோட்டை), திருமதி.காசிசெல்வி(சாத்தூர்), தேர்தல் வட்டாட்சியர் திரு.அய்யக்குட்டி, அனைத்து வட்டாட்சியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விருதுநகர்.**